(அஉ) மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் Fly Ash-ஐத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம் அவர்கள்.*

திரு. S. சதாசிவம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையில் 41 அடி தண்ணீர் இருக்கிறது. கர்நாடகா அரசு தண்ணீர் வழங்கவில்லை. அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து கவன ஈர்ப்பு தந்தது மாதிரி தெரியவில்லை. நீங்கள் என்ன கொடுத்தீர்களோ அதை வாசித்து உரையை முடியுங்கள்.*

திரு. S. சதாசிவம்: *சரி. மேட்டூர் அணையிலிருக்கிற தெர்மல் பவர் ஸ்டேஷனிலிருந்து வருகின்ற* fly ash-*ஐத் தடுத்து, மக்களைக் காப்பாற்ற வேண்டுமாய் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.*

(அஊ) தருமபுரி மாவட்டம், சனத்குமார் நதி மற்றும் தொப்பையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தருமபுரி மாவட்டம் இயற்கையாக, மேடான பகுதியில் அமைந்துள்ளது. மழைக்காலங்களில் பெய்யும் அனைத்து மழைநீரும் காவிரி உள்ளிட்ட மற்ற ஆறுகளுக்குச் சென்றுவிடுகிறது. அதனால், நிறைய தடுப்பணைகள் கட்ட வேண்டும். சனத்குமார் நதி, தொப்பையாறு ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகளைக் கட்ட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*